"தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 156(1)-காப்புரையின்படி ஆய்வுக்குழு அறிக்கை அளிப்பதற்கான காலவரையறையினை நீட்டித்தல். 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2008) மீதான ஆய்வுக் குழு தனது அறிக்கையினைப் பேரவைக்கு அளிப்பதற்கான காலவரையறையினை மேலும் ஆறு மாதங்களுக்கு இப்பேரவை நீட்டிக்கிறது"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(இ) பி.எஸ்.ஜி. பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008 மற்றும் தியாகராஜர் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008 மீதான ஆய்வுக் குழு அறிக்கை அளிப்பதற்கான காலவரையறையினை நீட்டித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப் பேரவை விதி 156(1)-காப்புரையின்படி ஆய்வுக்குழு அறிக்கை அளிப்பதற்கான காலவரையறையினை நீட்டித்தல் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 156 (1)-காப்புரையின்படி ஆய்வுக்குழு அறிக்கை அளிப்பதற்கான காலவரையறையினை நீட்டித்தல் 2008 ஆம் ஆண்டு பி.எஸ்.ஜி. பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2008) மற்றும் 2008 ஆம் ஆண்டு தியாகராஜர் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2008) ஆகியவை மீதான ஆய்வுக் குழு

2010 மே 14] [டாக்டர் க. பொன்முடி]

தனது அறிக்கையினைப் பேரவைக்கு அளிப்பதற்கான காலவரையறையினை மேலும் ஆறு மாதங்களுக்கு இப்பேரவை நீட்டிக்கிறது"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆய்வுக் குழுவினுடைய அறிக்கை அளிப்பதற்கு ஆறு மாத காலப் பணி இப்போது நடைபெற்று முடிந்திருக்கிறது. இன்னும் ஒரு ஆறு மாதம் காலம் நீட்டிப்பதாலே, அந்தக் கல்லூரிகளைப் பல்கலைக்கழகமாக மாற்ற முடியுமா, மாற்ற முடியாதா என்ற பிரச்சினை ஆசிரியர்கள் மத்தியிலும், மாணவர்கள் மத்தியிலும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதனால், இந்த ஆறு மாத காலம் என்பதை ஒரு மூன்று மாத காலம் என்ற அளவில் குறைத்து, உடனடியாக நீங்கள் இதற்கு ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று நான் இந்த அவையிலே கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-55

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு முதல் நாள்தான் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் வேண்டுமா என்ற கேள்விக்கு, முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் குழந்தைசாமி, திரு. அனந்தகிருஷ்ணன், திரு. நாகநாதன், திரு. ஜெகதீசன், டாக்டர் பாஸ்கரன் ஆகியோர் அடங்கிய ஐந்து கல்வியாளர்கள் குழு தங்களுடைய அறிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் சமர்ப்பித்திருக்கிறார்கள். அவர்கள் தமிழகத்திலேயுள்ள, பொதுவாக இந்தியாவிலேயுள்ள கல்வி நிலைமைகளை அலசிப் பார்த்து, தமிழகத்திலே குறைந்தபட்சம் 100 பல்கலைக்கழகங்களையாவது உருவாக்க வேண்டும். அதுவும் குறிப்பாக, இந்தியாவிலே Deemed University-க்கும் Unitary University-க்கும் இடையேயுள்ள வேறுபாடு தெரியாமல் பல பேர் இருக்கிற காரணத்தினால், அவற்றுக்கான விளக்கங்களையெல்லாம் கொடுக்க வேண்டும். இதுபோன்ற

[டாக்டர் க. பொன்முடி] [2010 மே 14

Unitary—ஒருமைப் பல்கலைக்கழகங்களை உருவாக்குகிறபொழுது, எந்த அடிப்படையிலே உருவாக்கப்பட வேண்டுமென்று கொள்கைகளையும் அவர்கள் வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அதன் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, வெகு விரைவில் இந்தக் குழுவினுடைய கூட்டத்தைக் கூட்டி, அறிக்கை பற்றியும் ஆலோசித்து, அடுத்த கூட்டத் தொடரிலேயே அதைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர்க் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஊ) தமிழக சட்டப் பேரவை மற்றும் மேலவை நடவடிக்கைகள் உள்ளிட்ட ஆவணங்களை கணினி மூலம் பதிவு செய்து இணையதளத்தில் வெளியிடுதல் மற்றும் சட்டமன்ற ஒலி, ஒளிப் பதிவுகளை இலக்க முறை ஆவணங்களாக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழக சட்டப் பேரவை வரலாற்றுச் சிறப்பும், பாரம்பரியமும் கொண்டதாகும். தமிழக சட்டப் பேரவையின் வரலாற்றை ஆவணப்படுத்துவது, எதிர்காலத்தில் இப்பேரவையின் வரலாற்றை நிலைநிறுத்தப் பெரிதும் அவசியமான, தேவையான ஒன்றாகும். மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள், தீர்மானங்கள், மானியக் கோரிக்கைகள், நடைபெற்ற விவாதங்கள், ஆற்றப்பட்ட உரைகள், சமர்ப்பிக்கப்பட்ட பல்வகை அறிக்கைகள் போன்ற வரலாற்றுக் குறிப்புகள் தற்போது புத்தக வடிவில் உள்ளன. புதிய சட்டப் பேரவை செயல்படத் தொடங்கியுள்ள இந்தச் சூழ்நிலையில் பல ஆண்டு கால வரலாறு கொண்ட இந்தப் பேரவையின்